## சுருக்கம்

பள்ளிக் கல்வி - கருணை அடிப்படையில் பணிநியமனம் - திரு.கி.சதீஷ் (த/பெ (மறைந்த) திரு.தா.கிருஷ்ணமூர்த்தி) என்பவருக்கு 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக் கல்வி(தொ.க.1(2))த் துறை

அரசாணை (2டி) எண். 158

நாள்: 17.11.2023.
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்,
கார்த்திகை மாதம் 1

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 26.02.2021.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.055193/ஜே/இ4/2023, நாள் 27.09.2023.

.....

**ஆணை:-**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.கி.சதீஷ் என்பவர் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார். தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவரின் தந்தையார் திரு.தா.கிருஷ்ணமூர்த்தி என்பார் சேலம் மாவட்டம், வெள்ளையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த போது பணிக்காலத்தில் 13.03.2014 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.கி.சதீஷ் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 15.06.1992 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர்களது பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில், சேலம் மாவட்டம், வெள்ளையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த திரு.தா.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் வாரிசான அவரது மகன் திரு.கி.சதீஷ் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிபுரியும் அவரது பணியினை, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவரது நியமன நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. குமரகுருபரன்,
அரசு செயலாளர்.

**பெறுநர்**
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
(தனியரது பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றிதழ் இணைப்புடன்)
**நகல்:-**
பள்ளிக் கல்வி (அநமு பிரிவு) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

17.11.2023

வட்டாரக் கல்வி அலுவலகம்
29 FEB 2024
கெங்கவல்லி - 636 105

/பாதுகாப்பான முறையில்/

சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஒ.மு.எண்.8611/ஆ1/2023 நாள். .02.2024.

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி– பள்ளிக்கல்வி – சேலம் மாவட்டம், சேலம் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட (தொ.க), கெங்கவல்லி, வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.கி.சதீஸ் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணி நியமனம் பெற்ற நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அராசல் வெளியிடப்பட்ட ஆணை அனுப்புதல் – தொடர்பு.

பார்வை: 1.அரசு கடித (2டி)எண்.158/ப.க.தொ.க.1(2)த் துறை நாள்.17.11.2023
2.சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.55193/ஜே/இ4/2022, நாள்.18.01.2024.

-----

பார்வையில் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகளின்படி சேலம் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட (தொ.க), கெங்கவல்லி, வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.கி.சதீஸ் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணி நியமனம் பெற்ற நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அராசல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அன்னாரது பணிவரன்முறை ஆணை மற்றும் அசல் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காகவும், பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளவும் சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலருக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை நினைவூட்டுக்கு இடமின்றி உடன் அனுப்பிவைக்குமாறு சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு.**

அசல் அரசாணை மற்றும் அசல் பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்,
சேலம்.

13/2/2024

பெறுநர் :
வட்டாரக் கல்வி அலுவலர், கெங்கவல்லி, சேலம் மாவட்டம்.

நகல்:
மாவட்டக் கல்வி அலுவலர், (தொ.க) சேலம் மாவட்டம்.

நகல்
சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

/பாதுகாப்பான முறையில்/

சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

மு.மு.எண்.8611/ஆ1/2023 நாள். .02.2024.

வட்டாரக் கல்வி அலுவலகம்
29 FEB 2024
கெங்கவல்லி - 636105

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி- பள்ளிக்கல்வி – சேலம் மாவட்டம், சேலம் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட (தொ.க), கெங்கவல்லி, வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.கி.சதீஸ் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணி நியமனம் பெற்ற நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசால் வெளியிடப்பட்ட ஆணை அனுப்புதல் – தொடர்பு.

பார்வை:
1.அரசு கடித (2டி)எண்.158/ப.க.தொ.க.1(2)த் துறை நாள்.17.11.2023
2.சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.55193/ஜே/இ4/2022, நாள்.18.01.2024.

-----

பார்வையில் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகளின்படி சேலம் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட (தொ.க), கெங்கவல்லி, வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.கி.சதீஸ் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணி நியமனம் பெற்ற நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அன்னாரது பணிவரன்முறை ஆணை மற்றும் அசல் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காகவும், பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளவும் சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலருக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை நினைவூட்டுக்கு இடமின்றி உடன் அனுப்பிவைக்குமாறு சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு.**

அசல் அரசாணை மற்றும் அசல் பணிப்பதிவேடு

13/2/2024

முதன்மைக் கல்வி அலுவலர்,
சேலம்.

பெறுநர் :
வட்டாரக் கல்வி அலுவலர், கெங்கவல்லி, சேலம் மாவட்டம்.

நகல்:
மாவட்டக் கல்வி அலுவலர், (தொ.க) சேலம் மாவட்டம்.

நகல்
சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)